## சாதாரணக்கூட்டம்

**2023–ம்** ஆண்டு, ஜுலை மாதம் **31–ம்** தேதி **திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு** பள்ளிபாளையம் நகராட்சி மன்ற அரங்கில் சாதாரணக் கூட்டம் நடைபெறவுள்ளது. அதுசமயம் நகர்மன்றத் துணைத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினர்கள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**திரு.மோ.செல்வராஜ்,**
**தலைவர்**
**பள்ளிபாளையம் நகராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

**பொருள் எண்.1**

**நகர்மன்ற தலைவரால் கொண்டுவரப்படும் சிறப்பு தீர்மானம்**

மக்கள் தொண்டே மகேசன் தொண்டு – எனும்
மாபெரும் வாழ்க்கை தத்துவத்தின் வழிநடந்து
தன்னலமற்ற மக்கள் பணி மூலம்
உன்னத உழைப்பை தந்திடும்
உள்ளாட்சி பிரதிநிதிகளின் செயல்பாடுகளை – மேலும்
ஊக்கப்படுத்தும் விதமாய்
பள்ளிபாளையம் நகராட்சி
நகர்மன்றத் தலைவர்,
துணைத் தலைவர்
மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களுக்கு
மாதாந்திர மதிப்பூதியம் வழங்கிட உத்திரவிட்டும்,
“மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா”
என்ற கவிமணியின் வாக்கின் வாய்மையை மெய்பிக்கும் வகையில்
கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கி
இந்திய பெருநாட்டின் அனைத்து மாநிலங்களும்
பின்பற்றிடும் முன்னோடி திட்டத்தை செயல்படுத்திட்ட
தமிழ் திருநாட்டின் தலைமகன்
உலகத் தமிழர்களின் உன்னத தலைவன் .....
கழகம் காத்து காவியம் படைக்கும் கலைஞரின் தவப் புதல்வன்....

தமிழ்நாடு **முதலமைச்சர் மாண்புமிகு தலைவர் தளபதி** அவர்களுக்கு

கோடான கோடி நன்றிகளை உரிதாக்கி இத்தீர்மானம் கொண்டுவரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1070/2021/சி2

**<u>பொருள் எண்.2</u>**

பள்ளிபாளையம் நகராட்சி ஆணையாளர், அவர்களின் ஜீலை –2023 ஆம் ஆண்டு மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1554/2014/சி1

**<u>பொருள் எண்.3</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் ஜீலை மாதம் 26–ந் தேதி வரை வசூல் செய்யப்பட்ட கேட்பு வசூல் நிலுவை விபரம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டு உள்ளது.

**(ரூ. லட்சத்தில்)**

| வ. எண் | வரியின் விபரம் | கேட்பு | | வசூல் | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு | நிலுவை | நடப்பு |
| 1. | சொத்துவரி | 4.37 | 199.21 | 0.13 | 19.36 | 4.23 | 179.85 |
| 2. | காலியிட வரி | 1.87 | 3.47 | 1.87 | 0.98 | 0 | 2.49 |
| 3. | தொழில்வரி | 14.38 | 8.22 | 9.32 | 0.19 | 5.06 | 8.02 |
| 4 | தண்ணீர் கட்டணம் | 6.80 | 70.93 | 0.43 | 4.82 | 6.37 | 66.11 |
| 5 | வரியில்லா இனம் | 0 | 19.63 | 0 | 17.80 | 0 | 1.83 |
| 6 | திடக்கழிவு மேலாண்மை | 0.21 | 47.88 | 0.01 | 4.22 | 0.21 | 43.65 |
| | **மொத்தம்** | **27.63** | **349.34** | **11.76** | **47.37** | **15.87** | **301.95** |

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1523/2013/சி1

பொருள் எண்.4

பொதுசுகாதார வாகனம் எண் TN 34 Y 4624 –க்கு நடப்பாண்டிற்கான வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிசான்று பெற வாகனத்தில் உள்ள அனைத்து பழுதுபணிகளும் மேற்க்கொள்ளும் பொருட்டு 03.07.2023–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில், 19.07.2023–ந் தேதி கீழ்கண்ட இரண்டு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெறப்பட்டுள்ளன. அவற்றின் விவரம்.

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்ற நிறுவனங்களின் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.பை | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | M/s.ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>106/4, சங்ககிரி பைபாஸ் ரோடு, திருச்செங்கோடு | ரூ.98,176 /– | குறைவு |
| 2 | M/s.சுப்ரீம் கார்ஸ்<br>பரமத்தி ரோடு, நாமக்கல். | ரூ.1,00,536 /– | அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார வாகனம் எண் TN 34 Y 4624 –க்கு நடப்பாண்டிற்கான வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெற வாகனத்தில் உள்ள அனைத்து பழுது பணிகளும் மேற்க்கொள்ள வரிசை எண் 1 – ல் காணும் M/s.ஸ்ரீ வெள்ளியங்கிரி ஆட்டோ ஒர்க்ஸ், திருச்செங்கோடு என்ற நிறுவனம் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கியுள்ளது. எனவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வழங்கிய நிறுவனத்திற்கு, பொதுசுகாதார அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.702/2023/எச்1

பொருள் எண்.5

பொதுசுகாதார வாகனம் எண் டி.எண்.34 ஒய் 4624– வாகனத்தில் உள்ள அனைத்து பழுதுகளை மேற்க்கொண்டு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதி சான்று பெறப்பட்டு வருகின்றது. கடந்த 2021–ம் ஆண்டு பெறப்பட்ட தகுதி சான்றுக்கான காலக்கெடு வருகின்ற 14.07.2023–ந் தேதியுடன் முடிவடைகின்றது. எனவே மேற்படி வாகனத்தில் ஏற்ப்பட்டுள்ள

அனைத்து பழுதுகளை சரிசெய்யவும், பழுதான பொருட்களுக்கு புதியதாக பொருட்கள் பொருத்துதல், ஹைட்ராலிக், டிப்பர்பாடி, சேஸ், பெயிண்டிங் வாசகங்கள் எழுதுதல் மற்றும் வயரிங் வேலைகள் செய்து தகுதி சான்று பெறவும், மேற்படி அனைத்து பணிகளையும் மேற்க்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.98,500/– ஆகும். எனவே இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்க்கொள்ளவும், மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார வாகனம் எண் டி.என்.34 ஒய் 4624–க்கு 2023–ம் ஆண்டிற்கு வட்டாரப்போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிசான்று பெற வாகனத்தில் ஏற்ப்பட்டுள்ள அனைத்து பழுதுபணிகளும் மேற்க்கொள்ளும் பொருட்டு உரிய உத்தேச செலவின தொகையான ரூ.98,500/–க்குள் செலவினம் மேற்க்கொள்ளவும், பொதுசுகாதாரம் அவசர அவசியம் கருதி, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.702/2023/எச்1

<u>பொருள் எண்.6</u>

அரசாணை எண் 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.09.09.2022ன்படி பள்ளிபாளையம் நகராட்சிக்கு குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள ரூ.17.77கோடி (GOI Share ரூ.8.89கோடி + GOTN Share ரூ.5.33 கோடி + ULB Share ரூ.3.55 கோடி) நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அன்று பணி உத்திரவு வழங்கி தற்பாது பணிகள் நடைபெற்று வருகிறது. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் வழங்கிய அறிவுரையில் அம்ரூத் 2.0 குடிநீர் திட்ட அபிவிருத்தி பணிகளை கண்காணிக்க, திட்ட மேலாண்மை ஆலோசனை அமைப்பு (Project Management Consultancy) அமைக்க தெரிவிக்கப்பட்டது. மேற்படி திட்டப்பணியினை முழுமையாக கண்காணித்துக் கொள்ள திட்ட மேலாண்மை ஆலோசனை அமைப்பு (Project Management Consultancy) நியமனம் செய்யவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.36.00/– இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதி வழங்கலாம்.

கோப்பு எண்.1095/2023/இ1

<u>பொருள் எண்.7</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.07.2023– ம் தேதி வியாழக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி திட்டம் 2023–24</u><br>பள்ளிபாளையம் நகராட்சியில் திறந்த வெளியில் மலம் கழிப்பதை ஒழிப்பது (Open Defecation) குறித்து ஆய்வு செய்வதற்கு 32 கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 5,00,000 /- | ஸ்ரீ பண்ணாரி அம்மன் பில்டர்ஸ்,<br>141, ஆவாரங்காடு கிழக்கு,<br>பள்ளிபாளையம் | 0.13% குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன்<br>5–6/327, கே.எஸ் நகர்,<br>பள்ளிபாளையம் | 0.95 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.13% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், ஸ்ரீ பண்ணாரி அம்மன் பில்டர்ஸ் ன்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.929/2023/இ1

<u>பொருள் எண்.8</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.07.2023– ம் தேதி வியாழக்கிழமை அன்று இரண்டு

ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>பொதுநிதி திட்டம் 2023-24</u><br>பள்ளிபாளையம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள இ-சேவை மையத்தின் முன்புறம் மேற்கூரை அமைக்கும் பணி | 80,000 /- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5-6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.12% குறைவு |
| | | | ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் பிரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட், 105, திருச்செங்கோடு ரோடு மேற்கு, பள்ளிபாளையம் | 1.30 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.12% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.903/2023/இ1

<u>பொருள் எண்.9</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.07.2023- ம் தேதி வியாழக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>பொதுநிதி திட்டம் 2023–24</u>**<br>பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கு பகுதியில் அமைந்துள்ள நுண்உர மையத்திற்கு R.O Plant , Incinerator மற்றும் இதரப் பணிகள் செய்யும் பணி | 1,50,000 /- | ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் பிரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட்,<br>**105**, திருச்செங்கோடு ரோடு மேற்கு, பள்ளிபாளையம் | 0.58% குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன்<br>**5–6/327**, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 1.83 %<br>கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.58% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் பிரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.**613**/2023/இ**1**

**<u>பொருள் எண்.10</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.07.2023– ம் தேதி வியாழக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **பொதுநிதி திட்டம் 2023–24** பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான ஆவாரங்காடு பகுதியில் அமைந்துள்ள நுண்உர மையத்திற்கு பராமரிப்பு பணிகள் மேற்கோள்ளும் பணி | 1,80,000 /- | ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் பிரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட், 105, திருச்செங்கோடு ரோடு மேற்கு, பள்ளிபாளையம் | 0.18% குறைவு |
| | | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 1.58 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.18% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் பிரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.680/2023/இ1

**பொருள் எண்.11**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் குடிநீர் திட்ட நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.07.2023– ம் தேதி வியாழக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **குடிநீர்நிதி திட்டம் 2023-24** பள்ளிபாயைம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 60 எண்ணிக்கைகள் HDPE தொட்டிகள் சுத்தம் செய்யும் | 80,000 /- | ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் பிரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட், 105, திருச்செங்கோடு ரோடு மேற்கு, பள்ளிபாளையம் | 0.18% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | பணி | | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் **5–6/327**, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 1.73 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.18% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் பிரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.**905** /2023/இ1

**பொருள் எண்.12**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.07.2023– ம் தேதி வியாழக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **குடிநீர்நிதி திட்டம் 2023-24**<br>பள்ளிபாளையம் நகராட்சியில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்க்கு குளோரின் கேஸ் அவ்வப்போது கொள்முதல் செய்தல் | 3,71,000 /- | சிவாலிக் ரத்தினம் கெமிக்கல்ஸ், **96**, திண்டல் மாணிக்கம்பாளையம், ஈரோடு | 0.05% குறைவு |
| | | | ஜீபிடர் எண்டர்பிரைசஸ், திண்டல், ஈரோடு | 1.90 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.05% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், சிவாலிக் ரத்தினம் கெமிக்கல்ஸ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.**1426**/2021/இ1

<u>பொருள் எண்.13</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் நமக்கு நாமே திட்ட நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 14.07.2023– ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **நமக்கு நாமே திட்டம் 2023-24**<br>10 வது வார்டு நேரு நகர் 3–வது தெரு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 3,00,000 /- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.03% குறைவு |
| | | | ஜெய் ஆஞ்சநேயா கன்ஸ்ட்ரக்ஷன் பிரமோட்டார்ஸ் அன் ரியல் எஸ்டேட், 105, திருச்செங்கோடு ரோடு மேற்கு, பள்ளிபாளையம். | 0.25 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.03% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.038 /2023/இ1

<u>பொருள் எண்.14</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் மாநில நிதிக்குழு மான்யம் 2023–24ன் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 19.07.2023ம் தேதி புதன்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>மாநில நிதிக்குழு மானியம்</u>**<br><br>**<u>(SFC Arrear) 2023–24 சிப்பம் – 1</u>**<br><br>வார்டு எண் 20 பெரியார் நகர் மெயின் ரோடு (வடக்கிலிருந்து தெற்கே செல்லும் சாலை) (052020R140) வார்டு எண் 20 பெரியார் நகர் முதல் குறுக்கு தெரு கிழக்கு புறம் (வடக்கே செல்லும் சாலை) (052020R145) வார்டு எண் 20 பெரியார் நகர் இரண்டாம் குறுக்கு தெரு கிழக்கு புறம் (வடக்கே செல்லும் சாலை) (052020R146) வார்டு எண் 20 பெரியார் நகர் குறுக்கு தெரு கிழக்கு புறம் (வடக்கிலிருந்து தெற்கே செல்லும் சாலை) – 1 (052020R148) வார்டு எண் 20 பெரியார் நகர் குறுக்கு தெரு (வடக்கிலிருந்து தெற்கே செல்லும் சாலை) – 2 (052020R149) வார்டு எண் 20 பெரியார் நகர் குறுக்கு தெரு (கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் சாலை) ஆற்றின் அருகில் (052020R151) வார்டு எண் 20 பெரியார் நகர் குறுக்கு தெரு (கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் சாலை) ஆற்றின் அருகில் (052020R152) வார்டு எண் 20 பெரியார் நகர் குறுக்கு தெரு (கிழக்கிலிருந்து மேற்கே செல்லும் சாலை) ஆற்றின் அருகில்(052020R153) வார்டு எண் 19 நாகத்தாம்மாள் கோவில் தெரு (052019R139) ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் | 55,00,000 /- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.04% குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97ஏ,<u>ஊஞ்</u>சப்பாளையம், பூதப்பாடி(P.O),பாவனி | 0.64 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.04% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1001/2023/இ1

**<u>பொருள் எண்.15</u>**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் மாநில நிதிக்குழு மான்யம் **2023–24**ன் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 19.07.2023ம் தேதி புதன்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **<u>மாநில நிதிக்குழு மானியம் (SFC Arrear) 2023–24 சிப்பம் – 2</u>** வார்டு எண் 13 குரங்குபுதூர் ரோடு (052013R097) வார்டு எண் 14 ஓம்சக்தி கோவில் பின்புற ரோடு (052014R103) வார்டு எண் 12 ஈ.ஆர்.தியேட்டர் மெயின் ரோடு (052012R092) வார்டு எண் 15 கிருஷ்ணவேணி அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி ரோடு (052015R109) வார்டு எண் 15 ஆவாரங்காடு மேற்கு (052015R112) வார்டு எண் 16 காந்திபுரம் 4வது குறுக்கு தெரு (052016R119) வார்டு எண் 16 காந்திபுரம் மெயின் ரோடு (052016R120) வார்டு எண் 16 காந்திபுரம் முதல் தெரு (052016R122) ஆகிய பகுதிகளில் தார்சாலை சீரமைத்தல் | 64,00,000 /- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.04% குறைவு |
| | | | ஸ்ரீ சக்தி அசோசியேட்ஸ், 97ஏ,ஊஞ்சப்பாளையம், பூதப்பாடி(P.O),பாவனி | 0.64 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.04% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1001/2023/இ1

**பொருள் எண்.16**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023–24ன் கீழ் பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 19.07.2023ம் தேதி புதன்கிழமை அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கூடுதல், குறைவு மன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ | ஒப்பந்ததாரர் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **15வது மத்திய நிதிக்குழு மான்யம் 2023–24**<br>வார்டு எண் 18 ரேஷன் கடை ரோடு (052018R128) வார்டு எண் 18 முனியப்பன் கோவில் தெரு–1 (052018R129) வார்டு எண் 18 முனியப்பன் கோவில் தெரு–2 (052018R130) வார்டு எண்19 காமராஜ் படிப்பகம் மெயின் ரோடு (N- | 40,00,000 /- | M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் 5–6/327, கே.எஸ் நகர், பள்ளிபாளையம் | 0.01% குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | S) (052019R131) வார்டு எண் 19 காமராஜ் படிப்பகம் குறுக்குத் தெரு (கிழக்கு புறம்) (052018R132) வார்டு எண் 19 முருகன் கோவில் தெரு (052018R138) பெரியார் நகர் 3வது குறுக்கு தெரு மேற்கு புறம் (052020R141) வார்டு எண் 20 பெரியார் நகர் 9வது குறுக்கு தெரு மேற்கு புறம் (052020R143) வார்டு எண் 20 பெரியார் நகர் 12வது குறுக்கு தெரு மேற்கு புறம் (052020R144) வார்டு எண் 20 பெரியார் நகர் 3வது குறுக்கு தெரு கிழக்கு புறம் (வடக்கு பக்கம்) (052020R147) வார்டு எண் 20 பெரியார் நகர் 3வது குறுக்கு தெரு (வடக்கிலிருந்து தெற்கு) (052020R150) வார்டு எண் 21 பெரும்பாறைக்காடு மெயின் ரோடு குறுக்கு தெரு (052021R159) ஆகிய பகுதிகளில் சிமெண்ட் சாலைகள் சீரமைத்தல் | | ஸ்ரீ வீரமாத்தி அம்மன் டிரேடார்ஸ், 344,சுடமுத்தான்பட்டி, சிங்கம்பேட்டை, பவானி | 0.68 % கூடுதல் |

அலுவலக குறிப்பு

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்குகையில் 0.01% குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரார், M/s.எஸ்.ஆர்.வி கன்ட்ஸ்டிரக்ஷன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

கோப்பு எண்.1002/2023/இ1

<u>பொருள் எண்.17</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.119731/2023/CFC/1 நாள்.17.07.2023 செயல்முறையின் படி, நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு சுகாதார மானிய திட்டத்தின் கீழ் வெடியரசம்பாளையம் சாலை ஜீவா செட் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் (Urban primary health centre) ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி

வழங்கப்பட்டுள்ளது. எனவே, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணியினை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1094/2023/இ1

<u>பொருள் எண்.18</u>

பள்ளிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை இரண்டாண்டு சாதனைகளை விளம்பரம் செய்ய தீக்கதிர் நாளிதழில் 03.06.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. எனவே, விளம்பரம் செய்ததற்காக தீக்கதிர் நாளிதழிக்கு ரூ.9,000/– மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மேற்கண்ட பணிக்கு நகர்மன்ற தலைவர் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.795/2023 /இ1

<u>பொருள் எண்.19</u>

பள்ளிபாளையம் நகராட்சி பேரூராட்சியாக இருந்த காலக்கட்டத்தில் குடிநீர் விநியோகத்திற்கு என கட்டப்பட்ட ஒரு மோட்டார் அறை காவிரி ஆற்றங்கரையோரமாக அமைந்துள்ளது. தற்போது புதிய மோட்டார் அறை சமயசங்கிலி கிராமத்தில் ஆற்றங்கரையோரம் கட்டப்பட்டு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் நாட்டாக்கவுண்டன்புதூர் பகுதியில் 1.00 லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சுமார் 40 வருடங்களுக்கு முன்னதாக கட்டப்பட்டது. தற்போது அவ்விடத்தில் புதிய குடிநீர் திட்டத்தின் மூலமாக புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. எனவே காவிரி ஆற்றங்கரையோரமுள்ள பழுதடைந்துள்ள மோட்டார் அறை மற்றும் நாட்டாக்கவுண்டன்புதூர் பகுதியில் மிகவும் பழுதடைந்து பயன்பாடற்ற நிலையில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இடிந்து விழும் நிலையில் உள்ளதால், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பயன்பாடற்ற நிலையில் உள்ள இரு கட்டிடங்களையும் இடித்து அப்புறப்படுத்துவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1119 /2023 /இ1

<u>பொருள் எண்.20</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் இயங்கி வந்த கீழ்கண்ட மூன்று பள்ளிகளில் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்த அடிப்படை வசதிகளை மாணவ, மாணவியரின் நலன் கருதி மேற்கொள்வது அவசியமாகும்.

1). நாட்டாக்கவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப் பள்ளி

2). ஆவாரங்காடு நகராட்சி துவக்கப் பள்ளி

3). கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப் பள்ளி

இதில், நாட்டாக்கவுண்டன்புதூர் நகராட்சி பள்ளியில் வகுப்பறைகளில் தரைத்தளம் அமைக்கவும், சேதமடைந்துள்ள மேற்கூறைகளை சரிசெய்யவும், புதிதாக மின்வசதி, தண்ணீர் வசதி மற்றும் குடிநீர் வசதி செய்யவும், மேலும் பள்ளி முகப்பில் நகராட்சி பள்ளி என அறிவிப்பு வளைவு வைக்கவும் ஆகும் செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1121 /2023/இ1

<u>பொருள் எண்.21</u>

பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் இயங்கி வந்த கீழ்கண்ட மூன்று பள்ளிகளில் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்த அடிப்படை வசதிகளை மாணவ, மாணவியரின் நலன் கருதி மேற்கொள்வது அவசியமாகும்.

1). நாட்டாக்கவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப் பள்ளி

2). ஆவாரங்காடு நகராட்சி துவக்கப் பள்ளி

3). கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப் பள்ளி

இதில், ஆவாரங்காடு நகராட்சி பள்ளியில், நகராட்சி பள்ளி என அறிவிப்பு வளைவு வைக்கவும், தலைமை ஆசிரியர் அறையில் சேதமடைந்துள்ள கான்கீரிட் கூரையினை சரிசெய்யவும், R.O. P அமைக்கவும் ஆகும் செலவினம் ரூ.10.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1121 /2023/இ1

**பொருள் எண்.22**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதிகளில் இயங்கி வந்த கீழ்கண்ட மூன்று பள்ளிகளில் மேற்கொள்ளப்படாமல் இருந்து வந்த அடிப்படை வசதிகளை மாணவ, மாணவியரின் நலன் கருதி மேற்கொள்வது அவசியமாகும்.

1). நாட்டாக்கவுண்டன்புதூர் நகராட்சி துவக்கப் பள்ளி

2). ஆவாரங்காடு நகராட்சி துவக்கப் பள்ளி

3). கண்டிப்புதூர் நகராட்சி துவக்கப் பள்ளி

இதில், கண்டிப்புதூர் நகராட்சி பள்ளியில் புதிதாக Smart Class அமைக்கவும், R.O. குடிநீர் நிறுவவும், பழுதடைந்துள்ள கதவு ஜன்னல்களை பராமரிப்பு செய்து சரிசெய்யவும் உணவு உண்ணும் அறை கட்டவும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.10.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1121 /2023 /இ1

**பொருள் எண்.23**

பள்ளிபாளையம் நகராட்சி அலுவலக வளாகத்தில் தற்போது இ–சேவை மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கு, நகராட்சி மற்றும் இதனை சுற்றியுள்ள கிராமங்களில் இருந்தும் நூற்றுக்கணக்கானவர்கள் வருகை புரிந்து தங்களுக்கு தேவையான விபரங்களை பதிவு செய்து வருகின்றனர். இம்மையம் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ளதால் அனைத்து மக்களும் போக்குவரத்துக்கு சிரமமின்றி வந்து செல்கின்றனர். இந்நிலையில், இம்மையத்தினை

காலி செய்து விட்டு தனியாரிடம் ஒப்படைப்பு செய்ய நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார். தனியாரிடம் ஒப்படைப்பு செய்யும்பொழுது இம்மையம் வேறு ஒரு இடத்திற்கு செல்ல நேரிடும். மேலும் பொதுமக்களும் போக்குவரத்திற்கு சிரமப்பட நேரிடும். எனவே இதே இ–சேவை மையம் தற்போது செயல்பட்டு வரும் இடத்திலேயே தனியார் மூலம் வாடகை அடிப்படையில் செயல்பட மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1149/2023 /இ1

<u>பொருள் எண்.24</u>

பள்ளிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் திருச்செங்கோடு சாலையில் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது இச்சாலையில் நெடுஞ்சாலைத் துறையினர் மூலம் பாலம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்காக, நகராட்சி வணிக வளாகத்தின் முன்புறம் உள்ள கான்கீரிட் தூண்களை இடிப்பதற்கு நெடுஞ்சாலைத்துறையினர் மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. வளாகத்தின் முன் உள்ள கான்கீரிட் தூண்கள் இடிக்கப்பட்டால், மொத்தமுள்ள வணிக கட்டிடமும் சேதமடைய நேரிடும். எனவே, மொத்த கட்டிடத்தினையும் இடித்துவிட்டு, பாலம் கட்டும் பணிகள் நிறைவடைந்த பின் அச்சமயத்தில் உள்ள காலி இடத்தினை கருத்தில் கொண்டு மீண்டும் அதே இடத்தில் அண்ணா வணிக வளாகம் கட்ட நெடுஞ்சாலைத் துறையினருக்கு இழப்பீடு கோரி நகராட்சி மூலம் கடிதம் அனுப்பப்பட்டது. தற்போது இழப்பீடு தொகையாக ரூ.15,37,252/–ஐ செலுத்த நெடுஞ்சாலைத் துறையினர் ஒப்புதல் வழங்கி உள்ளனர். எனவே, நெடுஞ்சாலைத் துறையினர் வழங்கியுள்ள இழப்பீடு தொகை போக, பாலம் கட்டும் பணி நிறைவடைந்த பின் உள்ள இடத்தின் அளவை பொருத்து கட்டிடம் கட்ட ஆகும் செலவினத் தொகையினை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பெற்று, வளாகத்தினை மீண்டும் கட்டி ‘‘அண்ணா வணிக வளாகம்‘‘ என பெயரிட முடிவு செய்யவும், இதற்காக தற்போதுள்ள கட்டிடத்தினை இடிக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.0342/2023/இ1

**பொருள் எண்.25**

மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் அவர்களின் ந.க.எண்.COLREV.27305/2023/ஆ5 நாள்.20.07.2023 செயல்முறையின்படி, நாமக்கல் மாவட்டத்தில் சுதந்திர நாள் விழா கொண்டாடுவதற்கு மாவட்டத்திலுள்ள சார்நிலை அலுவலகர்களுக்கு பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், பள்ளிபாளையம் நகராட்சிக்கு ஒலிபெருக்கி சாதனங்கள் ஏற்பாடு செய்தல், மூன்று பதாகைகள் கட்டுதல், சுதந்திர நாள்விழா நிகழ்வுகளை புகைப்படம் மற்றும் வீடியோ எடுக்க ஏற்பாடு செய்தல் ஆகிய பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.40,000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1150/2023/இ1

**பொருள் எண்.26**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.119731/2023/CFC/1 நாள்.17.07.2023 செயல்முறையின் படி, நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் நகராட்சிக்கு 15வது நிதிக்குழு சுகாதார மானிய திட்டத்தின் கீழ் வெடியரசம்பாளையம் சாலை ஜீவா செட் பகுதியில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் (Urban primary health centre) ரூ.120.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பணிக்கான இடத்தில் மண் பரிசோதனை மேற்கொண்டதற்கு அரசு பொறியியல் கல்லூரி தருமபுரி அவர்களுக்கு ரூ.21,240/—ஐ செலுத்துவதற்கு மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1094/2023/இ1

**பொருள் எண்.27**

பள்ளிபாளையம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியில் இருந்து முதல் நிலை நகராட்சியாக வளர்ச்சி அடைந்த பேரூராட்சிகள்,கிராம ஊராட்சிகள்,சென்சஸ் டவுனுடன் இணைத்து தரம் உயர்த இந்நகர்மன்ற எண்.244 நாள்.29.11.2022—ல் தீர்மானம்

நிறைவேற்றப்பட்டது.ஆலம்பாளைம் பேருராட்சி மற்றும் பள்ளிபாயைம் அக்ரஹாரம் பஞ்சாயத்து, புதுப்பாளையம் பஞ்சாயத்து, சமயசங்கிலி அக்ரஹாரம் பஞ்சாயத்து, களியனூர் பஞ்சாயத்து, ஓடப்பள்ளி அக்ரஹாரம் பஞ்சாயத்து ஆகிய ஐந்து ஊராட்சிகள் இணையும் எல்கை பகுதிகளை ட்ரோன் கேமரா மூலம் புகைப்படங்கள் எடுத்து அரசுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.15,000/—க்கு (ரூ.பதினைந்தாயிரம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி அறிவிப்பு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.1826/2022/எப்1

<u>பொருள் எண்.28</u>

பள்ளிபாளையம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியில் இருந்து முதல் நிலை நகராட்சியாக வளர்ச்சி அடைந்த பேரூராட்சிகள்,கிராம ஊராட்சிகள்,சென்சஸ் டவுனுடன் இணைத்து தரம் உயர்த இந்நகர்மன்ற எண்.244 நாள்.29.11.2022—ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.ஆலம்பாளைம் பேருராட்சி மற்றும் பள்ளிபாயைம் அக்ரஹாரம் பஞ்சாயத்து, புதுப்பாளையம் பஞ்சாயத்து, சமயசங்கிலி அக்ரஹாரம் பஞ்சாயத்து, களியனூர் பஞ்சாயத்து, ஓடப்பள்ளி அக்ரஹாரம் பஞ்சாயத்து ஆகிய ஐந்து ஊராட்சிகள் இணையும் எல்கை பகுதிகளை ட்ரோன் கேமரா மூலம் புகைப்படங்கள் எடுத்து அரசுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கும் பணிக்காக 29.06.2023 தேதி வியாழக்கிழமை கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | டேசில்,<br>டிரோன் சர்விஸ்சஸ்,110, முதல் தளம்,<br>கேவிபி மேல்தளம், சத்தி ரோடு,<br>வீரப்பன் சத்திரம்,ஈரோடு—638004 | ரூ. 8000/— |
| 2 | சுரேஷ் ஸ்டுடியோ, குமலன் குட்டை,<br>ஈரோடு—638011 | ரூ.10000/— |
| 3 | ஐ டெக் வீடியோஸ், பெருந்துறை ரோடு,<br>ஈரோடு – 638001 | ரூ.12000/— |

அலுவலக குறிப்பு

1. மேலே கண்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய டேசில், டிரோன் சர்விஸ்சஸ் அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியத்தினை கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

கோப்பு எண்.1826/2022/எப்1

**பொருள் எண்.29**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத்தலைவர்கள், மன்றத்துணைத் தலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் மதிப்பூதியம் வழங்கி தமிழ்நாடு அரசு வெளியிட்ட அரசாணை (நிலை) எண்.98, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.13.07.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1070/2021/சி2

**பொருள் எண்.30**

பள்ளிபாளையம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியில் இருந்து முதல் நிலை நகராட்சியாக வளர்ச்சி அடைந்த ஆலம்பாளைம் பேருராட்சி மற்றும் பள்ளிபாளையம் அக்ரஹாரம் பஞ்சாயத்து, புதுப்பாளையம் பஞ்சாயத்து, சமயசங்கிலி அக்ரஹாரம் பஞ்சாயத்து, களியனூர் பஞ்சாயத்து, ஓடப்பள்ளி அக்ரஹாரம் பஞ்சாயத்து ஆகிய ஐந்து ஊராட்சிகள், சென்சஸ் டவுனுடன் இணைத்து தரம் உயர்த்த இந்நகர்மன்ற எண்.244 நாள்.29.11.2022–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 07.07.2023 அன்று நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் வழி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**:

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

கோப்பு எண்.1826/2022/எப்1